பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

20 07 2025 **SUNDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குஜராத்தில் உள்ள கட்ச் பகுதியின் இயற்கை எழிலை புத்தகமாக வெளியிட்டுள்ள டிவிஎஸ் மோட்டார் குழுமத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நாளை தொடங்குவதையொட்டி, புதுதில்லியில் தற்போது அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்று வருகிறது.

3. எண்ணெய் உற்பத்தியில் நாடு சுயசார்பு அடையும் வகையில் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

4. அமர்நாத் புனித யாத்திரை மேற்கொண்ட யாத்ரிகர்களின் எண்ணிக்கை கடந்த 18 நாட்களில் மூன்று லட்சத்தை கடந்துள்ளது.

5. ரஷ்யாவுடன் அடுத்த வாரம் மீண்டும் அமைதி பேச்சுவார்த்தைகளை தொடங்க யுக்ரைன் விருப்பம் தெரிவித்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<<>>>>>>

குஜராத்தில் உள்ள கட்ச் பகுதியின் இயற்கை எழிலை புத்தகமாக தொகுத்துள்ளதற்காக டிவிஎஸ் மோட்டார் குழுமத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், டிவிஎஸ் மோட்டார் குழுமம் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த புத்தகத்தை அந்த நிறுவனத்தின் தலைவர் திரு வேணு சீனிவாசன் மற்றும் நிர்வாக இயக்குனர் திரு சுதர்சன் வேணு ஆகியோர் தம்மை நேரில் சந்தித்து வழங்கியது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

கட்ச் பகுதியின் இயற்கை அழகை மோட்டார் சைக்கிளில் வலம் வந்தபடி ரசித்துப் பார்ப்பதை இந்த புத்தகம் ஊக்குவிக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெற்ற **‘Rann** திருவிழாவின்போது அப்பகுதியின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் நிலப்பரப்பின் சிறப்புகளை வெளி உலகிற்கு எடுத்துரைக்கும் விதமாக,

குஜராத் சுற்றுலாத்துறையுடன் இணைந்து டிவிஎஸ் மோட்டார் குழுமம் நடத்தி, மோட்டார் சைக்கிள் பயணத்தின்போது எடுக்கப்பட்ட வண்ண புகைப்படங்கள் இந்த புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

<<<<<<>>>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நாளை தொடங்குவதையொட்டி, புதுதில்லியில் தற்போது அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்று வருகிறது.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மத்திய அமைச்சர்கள் திரு ஜெ பி நட்டா, திரு அர்ஜுன் ராம் மெக்வால், டாக்டர் எல். முருகன், மற்றும் காங்கிரஸ், திமுக, அஇஅதிமுக, தெலுங்கு தேசம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர், நாளை தொடங்கி, அடுத்த மாதம் 21-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

எண்ணெய் உற்பத்தியில் நாடு சுயசார்பு அடையும் வகையில் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு படிப்படியாக மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆழ்கடல் பகுதியில் சுமார் 10 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் எண்ணெய் துரப்பணப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிசக்தித்துறையில் உலக அளவிலும், உள்நாட்டிலும் முன்னணியில் உள்ள தொழில் நிறுவனங்கள் இந்த பணியில் ஈடுபட ஆர்வம் காட்டி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

**‘Anveshan** இயக்கத்தின்கீழ், இதுவரை 792 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்படுத்திய ஒரே நாடு - ஒரே மின் தொகுப்பு திட்டத்தின் பலனாக, நாட்டின் எந்த பகுதிக்கும் மின்சாரத்தை கொண்டு செல்லும் வசதி

ஏற்படுத்தப்பட்டிருப்பதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கோடை வெயிலின் தாக்கம் அதிக அளவில் காணப்படும் ராஜஸ்தான் மாநிலம் தற்போது சூரியசக்தி மின்சாரத்தை அதிக அளவில் உற்பத்தி செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், அம்மாநில மக்கள் மின்சார உற்பத்தியாளர்களாக உருவெடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ள இந்தியா, அடுத்தக்கட்டமாக மூன்றாவது பெரிய நாடாக உருவாவதற்கு மின்சாரம், தண்ணீர், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் உலகத்தரத்திலான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது அவசியம் என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

அமர்நாத் புனித யாத்திரை மேற்கொண்ட யாத்ரிகர்களின் எண்ணிக்கை கடந்த 18 நாட்களில் மூன்று லட்சத்தை கடந்துள்ளது.

இன்று ஜம்மு-வில் உள்ள பகவதி நகரிலிருந்து மேலும் 4 ஆயிரத்து 388 யாத்ரிகர்கள் புறப்பட்டு சென்றனர்.

இவர்கள் ஸ்ரீநகர் வழியாக அமர்நாத் சென்று பனி லிங்கத்தை தரிசிக்க உள்ளனர்.

<<<<<<>>>>>>

மலேரியா காய்ச்சலை கட்டுப்படுத்தும் நோக்கில், உள்நாட்டிலேயே தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பணியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது.

சுகாதாரத்துறையின் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்குழுமத்திற்கு உட்பட்ட தேசிய நோய் எதிர்ப்பு சக்தி ஆராய்ச்சி நிறுவனம், உயிரி தொழில்நுட்பத்துறையுடன் இணைந்து **AdFalciVax** என்று பெயரிலான தடுப்பு மருந்தை தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

இந்த தடுப்பு மருந்து, மனிதர்கள் மூலம் மலேரியா தொற்று பரவுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதுடன் பூச்சிகள் மூலம் நோய் பரவுவதையும் கட்டுப்படுத்தும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை நடத்தப்பட்ட பரிசோதனைகளின்படி, இந்த மருந்து நல்ல பலனை அளிக்கும் என்று தெரியவந்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

<<<<<<>>>>>>

யுக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தியுள்ள நிலையில், அடுத்த வாரம் மீண்டும் அமைதி பேச்சுவார்த்தைகளை தொடங்க யுக்ரைன் விருப்பம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, யுக்ரைனின் பாதுகாப்புக்குழு செயலாளர் திரு **Rustem Umerov** ரஷ்ய தூதர்களை தொடர்பு கொண்டிருப்பதாக யுக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி உறுதிபடுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள காணொலி பதிவில், போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் யுக்ரைன் மேற்கொண்டுள்ளதாகவும், ரஷ்ய தரப்பில் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் இன்றும், நாளையும் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அம்மாநிலத்தின் நைனிடால், உதம்சிங் நகர், சம்பாவத் மற்றும் பவ்ரி கார்வால் மாவட்டங்களில் கனமுதல் மிக கனமழையும் பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டேராடூன், ஹரித்துவார் உள்ளிட்ட நான்கு மாவட்டங்களுக்கு நாளை ஆரஞ்ச் நிற எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதனிடையே, காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக, தமிழகத்தின் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் நீர்வரத்து வினாடிக்கு 32 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் நடப்பாண்டில் மூன்றாவது முறையாக அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***‘Sound Byte - ’ சேலம் விஜயகுமார் - 40 ‘Sec.)’***

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்யும் தொடர் மழை காரணமாக, தேனி மாவட்டத்தில் உள்ள சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருப்பதையடுத்து, இரண்டாவது நாளாக சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***Sound Byte - ' தேனி ராஜ்குமார் - 25 'Sec.)***

நெல்லை மாவட்டத்தில் பெய்யும் மழை காரணமாக பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் இரண்டு அடியும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் எட்டு அடியும் உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Sound Byte - ' நெல்லை திருமலைக்குமார் - 44 'Sec.)***

<<<<<<>>>>>>

சர்வதேச செஸ் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

"ஒவ்வொரு நகர்த்தலும் கணக்கிடப்படுகிறது" என்பதே அந்த ஆண்டின் மையக்கருத்தாகும்.

கல்வி, மனநல ஆரோக்கியம் மற்றும் அதிகாரமளித்தலுக்கான சாதனமாக செஸ் விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆண்டு சமூக செஸ் ஆண்டாக கடைபிடிக்கப்படும் என்றும் சர்வதேச செஸ் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

விஸ்வநாதன் ஆனந்த் முதல், தற்போதைய இளைய தலைமுறையை சேர்ந்த வீரர், வீராங்கனைகளின் திறமையால் செஸ் விளையாட்டில் இந்தியா சர்வதேச அரங்கில் முன்னிலை வகிக்கிறது.

<<<<<<>>>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இளையோர் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

**Chelmsford**-ல் இப்போட்டி பிற்பகல் மணி 3.30க்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>>

இந்தியா – பாகிஸ்தான் சாம்பியன்ஸ் அணிகளுக்கு இடையே பர்மிங்ஹாமில் இன்று நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டி ரத்து செய்யப்படுவதாக உலக சாம்பியன்ஷிப் லெஜன்ட் அறிவித்துள்ளது.

<<<<<<>END>>>>>